# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 26.12.2008 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

கடந்த குத்பாவில் நான் அல்லாஹ்வின் **ஷாஃபி** – குணமளிப்பவன் என்ற பண்பை விளக்கியவாறு உடல்ரீதியான நோய்களுக்கு குணம் கிடைப்பது தொடர்பாக கூறினேன். அல்லாஹ் தனது அடியாருக்காக சில பொருட்களைப் படைத்து எவ்வாறு அதில் **ஷி**ஃபா (குணம்) வைத்துள்ளான் என்று கூறினேன். **ஷி**ஃபாவின் அசல் காரணம் அல்லாஹ்தான். அல்லாஹ்வின் கட்டளை இருந்தால் துஆவிற்கு **ஷி**ஃபா வழங்கும் சக்தி கிடைத்து விடுகிறது என்றும் கூறினேன். மேலும் அந்த குத்பாவின் இறுதியில், சில நேரம் அனைத்துவித சிகிச்சையும் வீணாகி விடுகிறது. பிறகு அல்லாஹ் தனது நல்லடியார்களின் துஆவை ஏற்றுக் கொண்டு **ஷி**ஃபா வழங்குகிறான். இவ்வாறு மிகத் தெளிவாக துஆவின் மூலம் **ஷி**ஃபாவின் அற்புதங்கள் வெளிப்படும்போது ஒரு நம்பிக்கை கொண்ட நல்லடியாருக்கு அல்லாஹ்வின் இருப்பின் மீது நம்பிக்கையும் பன்மடங்கு உறுதியாகி விடுகிறது. அல்லாஹ்வின் ஏகத்துவம் மற்றும் அவன் எல்லாவகையான சக்திகளும் படைத்தவன் என்பதில் நம்பிக்கை உறுதியாகிறது. இந்த அற்புதங்களைக் கண்டு அல்லாஹ்வின் பண்புகள் பற்றிய உண்மையான ஞானம் கிடைக்கிறது. இவ்வனைத்தும் ஒரு மூஃமினுக்கு தென்படும்போது அதன் விளைவாக ஒரு மூஃமினுக்கு ஆன்மீக நிலையிலும் முன்னேற்றம் ஏற்படுகிறது. தனது மிக விருப்பமான நபர் நோயிலிருந்து நலம் பெறும் போது, அவர் மரணத்தின் விளிம்பிலிருந்து மீண்டு வரும் போது, ஒரு மூஃமினை தனது ஆன்மீகத்தில் முன்னேற்றம் அடையச் செய்கிறது. அல்லது இதை இவ்வாறும் கூறலாம். உடல்ரீதியான **ஷி**ஃபா சில நேரம் ஆன்மீக **ஷி**ஃபாவிற்கு அடித்தளமாக இருக்கிறது. உண்மையில் மனித வாழ்வின் நோக்கம் எல்லாவித ஆன்மீக நோயிலிருந்தும் தூய்மையடைய எப்போதும் முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும் என்பதாகும். மேலும் ஒரு ஆரோக்கியமான முழு இறை அடியாராகத் திகழ எப்போதும் முயற்சி செய்து கொண்டிருக்க வேண்டும். இதற்காக அல்லாஹ் தன் அடியார்களைப் பார்த்து நீங்கள் என்னை வணங்குங்கள் என்று கூறுகிறான். மேலும் எனது கட்டளைகளைப் பேணுங்கள். இவ்வாறு நீங்கள் நடந்து கொண்டால் உடல்ரீதியான நோயிலிருந்து விடுதலை பெறுவது மட்டுமின்றி நீங்கள் ஆன்மீக நோயிலிருந்தும் பாதுகாப்புப் பெறும் பாக்கியத்தை அடைவீர்கள்.

அல்லாஹ் நம்மீது எவ்வளவு பெரிய அருளை இறக்கியுள்ளான் (என்று சிந்தித்துப் பாருங்கள்). அவன் தனது முழுமையான நபி (ஸல்) அவர்கள் மூலம் நமது ஆன்மீக **ஷி**ஃபாவிற்காக ஒரு முழுமையான போதனையை திருக்குர்ஆன் வடிவில் இறக்கியுள்ளான். திருக்குர்ஆனில் அல்லாஹ் பல இடங்களில் இது தொடர்பாக கூறியுள்ளான். திருக்குர்ஆன் உங்களுக்கு எவ்வாறெல்லாம் **ஷி**ஃபாவாக விளங்குகிறது என்று விளக்கியுள்ளான்.

கடந்த குத்பாவில் நான் தேனீ தொடர்பாக மனிதனின் உடல்ரீதியான நோய்களுக்கு **ஷி**ஃபா என்று கூறினேன். ஆனால் நாம் நன்கு சிந்தித்தால் தேனீ மூலமாக ஆன்மீக நோயின் **ஷி**ஃபாவும் உண்டு என்று புரியவரும். அல்லாஹ் தேனீ தொடர்பக இவ்வாறு கூறுகிறான். *உம் இறைவன் தேனீக்கு (இவ்வாறு) வஹி அறிவித்தான். நீ மலைகளிலும், மரங்களிலும் (திராட்சை முதலிய செடி கொடிகளுக்காக) அவர்கள் அமைக்கின்ற பந்தல்களிலும் கூடுகளைக் கட்டிக்கொள்.* (16:69)

உமது இறைவன் தேனீக்களுக்கு வஹியை இறக்கினான். அதன் விளைவாக அவை உயர்ந்த இடங்களில் தேன் கூடுகள் கட்டுகின்றன. பூக்களிலிருந்து தேனை உறிஞ்சி பல்வேறு நிலைகளைக் கடந்து தேனை உருவாக்குகிறது. இந்த தேனைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான். **ஃபீஹி ஷிஃபாவுன்**

**லின்னாஸ்** – இதில் மக்களுக்கு மருந்து உள்ளது. இந்த வசனத்தின் இறுதியில் அல்லாஹ் கூறுகிறான். **இன்ன ஃபீ ஸாலிக லஆயத்தல் லிகவ்மிய் யதஃபக்கரூன்** – சிந்தித்துச் செயலாற்றுபவர்களுக்கு நிச்சயமாக இதில் ஓர் அடையாளம் இருக்கிறது.

இங்கு எதைப் பற்றி அல்லாஹ் சிந்திக்கும்படி கூறுகிறான். அதாவது ஒரு சாதாரண தேனீக்கு கூட அல்லாஹ் வஹீயின் மூலம் வழிகாட்டியுள்ளான். அதன் மூலம் மக்களுக்கு குணம் வழங்குகின்ற பொருள் (தேன்) உருவாகிறது. முஸ்லிமானாலும் சரி, முஸ்லிம் அல்லாதவரானாலும் சரி தேனில் நல்ல குணம் உண்டு என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர். எனவே அல்லாஹ் கூறுகிறான். ஒவ்வொரு வேலைக்கும் அல்லாஹ்வின் வஹீ தேவைப்படுகிறது. இதைத்தான் அல்லாஹ் இங்கு சிந்திக்குமாறு கூறுகிறான். எனவே மக்களே! உங்களுள் சிலர் அல்லாஹ்வின் இருப்பை மறுக்கிறார்கள். தேன் உருவாகிறது என்றால் பூக்களிலிருந்து மகரந்தத்தை உறிஞ்சுவதிலிருந்து தேன் உருவாவது வரை எல்லா காரியங்களும் கூட அல்லாஹ்வின் வஹீயின் காரணமாக முழுமை அடைகிறது என்பதை சிந்தித்துப் பாருங்கள். அதுமட்டுமின்றி ஒரு சிறிய பூச்சி கூட தனது பணியைச் செய்வதற்கு வஹீயை எதிர்பார்க்கின்றது. அவைகளுக்கு தமது பணி தொடர்பாக வஹீயின் மூலம் வழிகாட்டல் கிடைக்கிறது. பூச்சி இனங்களில் ஒரு சிறந்த உதாரணம் தேனீயின் உதாரணமாகும். உண்மை நிலை இவ்வாறிருக்க மனிதன் தானாகவே நேர்வழி பெற்று விடுவான் என்றோ, நேர்வழி பெறுவதற்கு வழிகாட்டல்கள் எதுவும் தேவையில்லை என்றோ எவ்வாறு கூற முடியும்?

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இது தொடர்பாக கூறுகிறார்கள்:**

ஒரு பௌதீகவாதி தனது முயற்சியால் தனது நோக்கத்தை அடைந்து விடுவதாக கருதுகிறார். ஆனால் அவரது முயற்சி கூட துஆவின் ஒரு வகையே ஆகும். அதன் விளைவாக அவரது உள்ளத்தில் தோன்றுகின்ற திட்டங்களும் வஹியின் ஒரு வகை ஆகும்.

ஆக மனிதன் தேனீயின் செயல்பாட்டை வைத்து சிந்திக்க வேண்டும். அதாவது அல்லாஹ்வின் வழிகாட்டலின்றி எந்த சிறப்பான நோக்கத்தையும் பெறுவது சாத்தியமே இல்லை. எனவே படைப்பினங்களிலேயே சிறந்த படைப்பினமாகிய மனிதன், மேலும் அவனுக்காகத்தான் இரண்டு வாழ்வுகள் உள்ளன. ஒன்று இவ்வுலக வாழ்வு, மற்றொன்று மறுமையின் நிரந்தர வாழ்வு. மறுமை வாழ்வின் தரம் இவ்வுலக வாழ்வின் செயல்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அல்லாஹ் கூறிய கட்டளைகளுக்கு ஏற்ப அமைவதே அந்த செயல்கள் ஆகும். இவ்வாறு அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்பவே செயல்கள் அமைய வேண்டும். மேலும் இந்த செயல்களின் அடிப்படையில் தான் மறுமை வாழ்வு அமைந்துள்ளது என்றிருக்கும்போது அல்லாஹ்வின் வஹீ, இல்ஹாம் இல்லாமல் எவ்வாறு மனிதனால் இவ்வுலக வாழ்வில் நற்செயல்கள் செய்து மறு உலக வாழ்வை வெல்ல முடியும்?

எனவே மனிதனின் வெற்றிகரமான வாழ்விற்கும், அல்லாஹ்வின் விருப்பத்தை பெறுகின்ற வாழ்விற்கும் அல்லாஹ்வின் வஹீ மிகவும் அவசியமானதாகும். அல்லாஹ் இதற்காக ஒரு சட்டத்தை வைத்துள்ளான். அவன் தனது நபிமார்கள் மூலம் தனது நல்லடியார்கள் மூலம் ஆன்மீக உயர் தகுதிகளை அடைவதற்கு வழிகாட்டுகிறான். மேலும் மனித குலத்தில் மிகவும் முழுமையான மனிதராகிய ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மூலம் தனது வஹீயையும் முழுமைப்படுத்தினான். மேலும் திருக்குர்ஆன் போன்ற ஒரு முழுமையான வேத நூல் அல்லாஹ்வின் வஹீ மூலம் இறங்கியது.

இது தொடர்பாக அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான். இதுவும் ஷிஃபா ஆகும். இந்த திருக்குர்ஆன் மனிதனுக்கு ஆன்மீக ஷிஃபா வழங்குவது மட்டுமின்றி பௌதீக ஷிஃபாவும் இதில் இருக்கிறது.

ஒருமுறை சில சஹாபாக்கள் ஒரு இடத்திற்குச் சென்றார்கள். அங்குள்ள கோத்திரத்தின் தலைவர் உடல்நலமின்றி காணப்பட்டார். அவரை பாம்பு கொத்தி விட்டது. அப்போது ஒரு சஹாபிக்கு அது தெரிய வந்தது. அவர் திருக்குர்ஆன் வசனங்களை ஓதி ஊதினார். அதனால் அந்த தலைவர் நலம் பெற்று விட்டார். இந்த

சம்பவம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு தெரிய வந்தது. அப்போது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நீர் எதனை ஓதி ஊதினீர்? என கேட்டார்கள். அதற்கு அவர் நான் சூரா ஃபாத்திஹா ஓதி ஊதினேன் என்று கூறினார். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நீர் சரியாக செய்துள்ளீர் எனக் கூறினார்கள். மேலும் இதில் **ஷி**ஃபா உண்டு என்று உமக்கு எப்படி தெரியும்? என்று கேட்டார்கள். உடல்நலம் பெற்ற அந்த கோத்திரத்தின் தலைவர் இந்த சஹாபிக்கு ஒரு ஆட்டு மந்தையை பரிசாக கொடுத்தார். அதை இந்த சஹாபி நான் கூலி வாங்க மாட்டேன் என்று கூறி ஏற்க மறுத்து விட்டார். இதை அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கூறினார். அதற்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவரே விரும்பி கொடுத்ததை பெற்றுக் கொள்வதில் எந்தத் தடையும் இல்லை. ஆனால் அந்த சஹாபி ஆட்டு மந்தையை பெற மறுத்ததற்குக் காரணம், நீங்கள் திருக்குர்ஆனை பிழைப்பிற்காகப் பயன்படுத்தாதீர்கள் என்ற கட்டளை திருக்குர்ஆனில் இருக்கிறது. எனவே அவர் மறுத்து விட்டார்.

இன்றைய காலகட்டத்தில் மவ்லவிகள் பீர், ஃபகீர்மார்கள் தாயத்துக் கட்டி சம்பாதிக்கின்றார்கள். அவர்களுக்கு இதில் பாடம் இருக்கிறது. ஆனால், அஹ்மதிகள் இந்த செயலில் இருந்து பாதுகாப்பாக உள்ளனர். இது அல்லாஹ்வின் மாபெரும் கருணையாகும்.

ஆக, திருக்குர்ஆனில் ஆன்மீக நோய்க்கும் மருந்து இருக்கிறது. உடல்ரீதியான நோய்க்கும் மருந்து இருக்கிறது. மேலும் ஆன்மீக நோயிலிருந்து **ஷி**ஃபா பெறுவது தொடர்பாக திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் பல்வேறு வசனங்கள் வந்துள்ளன. இப்போது நான் சில வசனங்களை எடுத்துரைக்கின்றேன். ஆனால் அந்த வசனங்களை எடுத்துரைப்பதற்கு முன்பாக நான் ஒரு வி**ஷ**யத்தை விளக்க விரும்புகின்றேன். அதாவது திருக்குர்ஆனின் வடிவில் முழுமையான வேதநூலை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது அல்லாஹ் இறக்கினான். இந்த முழுமையான வேத நூலை இறக்கியதோடு இறைவன் வஹீயின் கதவுகளை மூடி விட்டான் என்று இதற்கு ஒருபோதும் பொருள் அல்ல. **ஷ**ரீஅத் முழுமையடைந்து விட்டது. மார்க்கம் முழுமை பெற்று விட்டது. ஆனால், அல்லாஹ் இதற்கு முன் எவ்வாறு நபிமார்களை அனுப்பி வைத்தான்? அவர்கள் மீது வஹீ இறங்கியது. ஆனால் அவர்கள் அனைவரும் புதிய **ஷ**ரீஅத்தைக் கொண்டு வந்தவர்கள் அல்ல. எனவே இவ்வாறு இப்போது நிகழும். அல்லாஹ்வின் கலாம் இறங்கிக் கொண்டுதான் இருக்கிறது. அல்லாஹ் வஹீ அனுப்பிக் கொண்டுதான் இருக்கிறான்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதற்கு உதாரணம் வழங்கியுள்ளார்கள். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு தவ்ராத் வேதம் இறங்கியது. அதற்கு பிறகு பல நபிமார்களை அல்லாஹ் அனுப்பினான். அவர்கள் அந்த தவ்ராத்தை மெய்ப்பிக்க வேண்டும் என்பதற்காகவே அல்லாஹ் அவர்களை அனுப்பினான். மேலும் காலங்கள் கடந்து விட்டதன் காரணமாக மக்கள் அதன்படி செயல்படுவதை விட்டு விடுவர். எனவே, மக்களை அதன் பக்கம் கவனமூட்டவே அந்த நபிமார்கள் வந்தார்கள். மேலும் அந்த நபிமார்களுக்கு முன் வந்த **ஷ**ரீஅத் கொண்டு வந்த நபியைப் பின்பற்றி வந்தனர். மேலும் அவர்களுக்கு பின் வந்த நபிமார்களிடமும் அல்லாஹ் உரையாடி வந்தான். இதன் மூலம் மக்களின் உள்ளத்தில் ஈமான் உறுதி பெறுகிறது. இவ்வாறே திருக்குர்ஆன் இறங்கி விட்ட பிறகும் வஹீயின் வாயில் மூடப்படவில்லை. இக்கால கட்டத்திலும் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் உரையாடி வந்தான். அல்லாஹ் அன்னாரை திருக்குர்ஆனின் போதனைகளை உண்மைப்படுத்துவதற்காகவே அனுப்பினான். அதை பரப்புவதற்காக அனுப்பினான். இறைவனது நேரடி வழிகாட்டல் மூலம் மூஃமின்களின் உள்ளத்தில் திருக்குர்ஆனின் போதனையைப் பதிய வைப்பதற்காகவும், பிற மக்களை இதன் பக்கம் அழைக்கவும் அல்லாஹ் இவ்வாறு செய்தான். மேலும் அல்லாஹ் தனது அடியானிடம் உரையாடுகிறான் என்பது வெறும் கட்டுக்கதையாகி விடக்கூடாது. மாறாக, அது ஒரு நிரந்தர செயலாக இருக்க வேண்டும் என்பதற்காக அல்லாஹ் அவ்வாறு செய்தான். மேலும் திருக்குர்ஆனின் மாசற்ற போதனையின்மீது ஈமான், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீது ஈமான், அல்லாஹ்வின் இருப்பின் மீது ஈமான் இதில் எப்போதும் முன்னேற்றம் இருக்க வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

வேதங்கள் இறங்கி காலங்கள் கடக்கும்போது வீணான சிந்தனைகள் அதில் தோன்றுகிறது. மேலும் தூய உண்மையின் முகம் மறைந்து விடுகிறது. அப்போது அதன் அழகிய முகத்தை காட்டுவதற்காக முஜத்தித், முஹத்தஸ் மற்றும் ஆன்மீக சீர்திருத்தவாதிகள் வருகிறார்கள். அவர்கள் மார்க்கத்தை ரத்து செய்வதற்காக அல்ல. மாறாக, மார்க்கத்தில் பிரகாசத்தை வெளிப்படுத்தவே வருகிறார்கள். இதுவே எமது நம்பிக்கையாகும்.

14 ஆம் நூற்றாண்டில் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை திருக்குர்ஆனின் அழகிய போதனையின் பிரகாசத்தை உலகின் முன் காட்டுவதற்காக அனுப்பியுள்ளான். வஹீ மற்றும் இல்ஹாமின் கதவுகளை அல்லாஹ் ஒருபோதும் மூடவில்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்குப் பின் அன்னாரது பணியை அல்லாஹ்வின் குறிப்பான வழிகாட்டலுடன் முன்னேற்றத்திற்கு இட்டுச் செல்வது கிலாஃபத்தின் பணியாகும். மேலும் திருக்குர்ஆனின் ஆட்சியை உலகில் நிலைநாட்டுவது நமது மாபெரும் நோக்கமாகும். இதன் மூலம் உலகம் ஒரு முழுமையான சிகிச்சையில் இருந்து பலன்பெற்று தனது ஆன்மீக **ஷி**ஃபாவிற்காகவும் தயாராக வேண்டும்.

இன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றும் அன்னாரால் நிறுவப்பட்ட ஜமாஅத்தின் மீது மக்கள் ஆட்சேபனை செய்கிறார்கள். உலமா மற்றும் முஃபஸ்ஸிரீன்கள் அவர்களிடம் இருக்கிறார்கள். திருக்குர்ஆன் உள்ளத்தின் மாசுகளை அகற்றி **ஷி**ஃபா வழங்குகிறது என்பது திருக்குர்ஆன் செய்யும் வாதமாகும். இவ்வாறு இருக்க முஸ்லிம்களுக்கு இது பலனளிக்கிறதா? என்று இவர்களே சிந்தித்துப் பதில் தரட்டும். ஒட்டுமொத்த முஸ்லிம் உம்மத்தின் நிலையும் இதற்கு இல்லை என்று பதில் தருகிறது. திருக்குர்ஆன் அவர்களிடம் இருக்கிறது. அவர்களின எண்ணத்தின் அடிப்படையில் ஆலிம்களும், முஃபஸ்ஸிரீன்களும் இருக்கிறார்கள். ஆனால் திருக்குர்ஆனின் பலன் அவர்களுக்கு கிடைக்கவில்லை. திருக்குர்ஆனின் போதனைகளில் குறைபாடு உள்ளது என்று நவூதுபில்லாஹ் – நாம் கூறமுடியுமா? இல்லை. நிச்சயமாக இல்லை. பொய் இருக்கிறது என்றால் இந்த பெயர்தாங்கி ஆலிம்களின் செயல்களில்தான் பொய் இருக்கிறது. எங்களுக்கு எந்த மஸீஹ் மற்றும் மஹ்தியின் தேவை இல்லை என்று கூறுகிறார்கள். அவர்கள் தங்களது செயலினால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளையை மறுக்கின்றார்கள். திருக்குர்ஆன் அல்லாஹ்வின் அருளால் இன்றும் மூஃமின்களுக்கு **ஷி**ஃபாவாகும். அல்லாஹ் அஹ்மதிகளாகிய நம்மை எப்போதும் இந்த அருட்கொடையை மதிப்பவர்களாக ஆக்குவானாக.

இப்போது நான் திருக்குர்ஆனின் சில வசனங்களை எடுத்து வைக்கிறேன்.

**சூரா பனீ இஸ்ராயீலில் அல்லாஹ் கூறுகிறான்.**

**வனு நஸ்ஸிலு மினல் குர்ஆனி மாஹுவ ஷிஃபாவுவ் வரஹ்மத்துல் லில் முஃமினீன். வலா யஸீதுல்லாலிமீன இல்லா ஃகஸாரா** – *நம்பிக்கையாளருக்குக் குணமளிப்பதாகவும், அருளாகவும், தவறிழைப்பவர்களுக்கு நஷ்டத்தை அதிகரிக்கக் கூடியதாகவும், திருக்குர்ஆனிலிருந்து (படிப்படியாகப் போதனைகளை) இறக்கிக் கொண்டிருக்கிறோம்.*

இந்த வசனத்தில் அல்லாஹ் ஒருபுறம் இதில் குணம் மற்றும் கருணை இருக்கிறது என்று கூறுகிறான். மறுபுறம் மூஃமின் அல்லாதவருக்கு இதில் இழப்பைத் தவிர வேறு எதுவும் இல்லை என்று கூறுகிறான். திருக்குர்ஆனின் துவக்கத்திலேயே சூரா பக்கராவில் அல்லாஹ் **ஸாலிகல் கிதாபு லா ரய்ப ஃபீஹி ஹுதல் லில் முத்தகீன்** – *அதாவது இந்த குர்ஆன் அல்லாஹ்வின் கலாம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இது இறையச்சம் கொண்டவர்களுக்கு நேர்வழியாகும் என்று கூறினார்கள்.*

ஆக, இந்த ஆன்மீக குணம் மற்றும் நேர்வழி மூஃமின்களுக்குதான். தீமையால் நிறைந்த உள்ளம் படைத்தவர்களுக்கும் மேலும் இதில் எப்போதும் குறையைத் தேடுபவர்களுக்கும், அவர்கள் பொறாமையால்

நிறைந்திருக்கின்ற காரணத்தால் திருக்குர்ஆனிலிருந்து பலன் பெற முடியாது. அவர்களை திருக்குர்ஆன் நஷ்டத்தில் முன்னேறச் செய்யும். இவர்களின் உள்ளத்தில் ஏற்கனவே முத்திரை இடப்பட்டு விட்டது. மேலும் அல்லாஹ் இவர்களுக்கு தீய முடிவை விதித்து விட்டான். ஆனால், மூஃமின்களுக்கு இதில் குணமும், கருணையும் இருக்கிறது. இவர்கள் ஈமான் கொண்ட பிறகு இதன்படி செயலாற்றி தங்களது ஆன்மீக நிலையில் முன்னேறுகிறார்கள்.

இக்காலக்கட்டத்தில் திருக்குர்ஆன் இரகசியங்களையும், நுட்பமான ஞானங்களையும் நமக்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் போதித்து நமது உள்ளத்தின் மாசுகளையும், நோயையும் ஆச்சரியம் அடையும் அளவிற்கு தூய்மையை வழங்குகிறார்கள். மருந்து நம் கையில்தான் இருந்தது. ஆனால், அதை பயன்படுத்தும் விதம் நமக்க தெரியவில்லை என்பது நமக்கு பிறகுதான் தெரிய வருகிறது. நாம் சிகிச்சை செய்து கொள்ள முயற்சிகள் செய்தோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொள்ளாதவர்கள் இப்போதும் முயற்சி செய்கிறார்கள். ஆனால் இந்த சிகிச்சையோடு என்னென்ன பத்தியத்தை கடைபிடிப்பது அவசியம் என்று தெரியாமல் இருந்தது. ஏனென்றால் ஒவ்வொரு மருந்திற்கும் மருத்துவர் சில பத்தியத்தையும் கூறுவார்.

ஆக, இது அல்லாஹ் நம்மீது செய்த மாபெரும் அருளாகும். நாம் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டு அவரோடு இணைந்திருக்கின்ற நற்பாக்கியத்தை நமக்கு வழங்கியுள்ளான்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உம் மூலம் நோயாளிகளின் மீது அருள் இறங்கும். இதில் ஆன்மீக மற்றும் பௌதீக நோயாளிகள் அடங்குவர். இது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். இது ஆன்மீக ரீதியாக இவ்வாறு பொருந்துகிறது. எனது கையில் ஆயிரக்கணக்கானவர்கள் பைஅத் செய்துள்ளனர். அவர்களின் செயல் நிலைகள் முன்பு மோசமாக இருந்தது. ஆனால், பைஅத் செய்த பிறகு சீர்திருந்தி விட்டது. பல்வேறு பாவங்களிலிருந்து அவர்கள் தவ்பா செய்தார்கள். தொழுகையை பேணி வருகிறார்கள். உள்ளத்தின் இச்சைகளிலிருந்து, எவ்வாறு விடுதலை பெறுவது? என்று கவலையடைகின்ற நூற்றுக்கணக்கான மக்களை நான் எனது ஜமாஅத்தில் பார்க்கிறேன்.

நோயாளிகளின்மீது கருணை காட்டி குணம் வழங்குவேன் என்று அல்லாஹ் வாக்குறுதி அளித்த நபர்தான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை நேசரும் திருக்குர்ஆனை உண்மையில் நேசிப்பவரும் ஆவார். அவரை ஏற்றுக் கொள்வதன் மூலம் ஆன்மாக்களுக்கு ஷிஃபா கிடைக்கும். பயன்பெற முயற்சி செய்வது தான் இதற்கு நிபந்தனையாகும்.

இதோடு இன்னொரு விஷயமும் இந்த வசனத்திலிருந்து விளங்குகிறது. அல்லாஹ்வின் அருளுக்கு இப்போது மூஃமின்கள்தான் வாரிசு ஆவார்கள் என்பதை எண்ணி மூஃமின்கள் மகிழ்ச்சி அடைய வேண்டும். திருக்குர்ஆனில் வந்துள்ள அனைத்து முன்னறிவிப்புகளும் மூஃமின்களுக்கு சாதகமாக கடந்த காலத்திலும் பூர்த்தி ஆனது. ஆகரீன்களின் காலத்திலும் நிறைவடையும். மூஃமின்களின் ஜமாஅத்திற்கும் ஷய்த்தானின் ஜமாஅத்திற்கும் மத்தியில் போர் நடந்து கொண்டிருக்கின்றது. இந்த போரின் முடிவு இறுதியில் மூஃமின்களுக்கு சாதகமாகத்தான் அமையும். எதிரிகள் நஷ்டமடைவார்கள். இது ஒரு முன்னறிவிப்பாகும். இது மஸீஹ் மவ்வூதின் ஜமாஅத்திலும் உள்ளபடியே நிறைவேறும். நான் இரக்க குணத்தோடு அனைத்து நல்ல உள்ளம் கொண்ட முபல்லிக்குகளிடம் கூறி வந்துள்ளேன். திருக்குர்ஆனின் போதனைகளின் உண்மையான பலன் மற்றும் அருள் இப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைவதை அடிப்படையாக கொண்டுள்ளது. ஏனென்றால் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தங்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கு மிகவும் வலியுறுத்திக் இதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். மேலும் ஆகரீன்களில் இணைந்தால் நீங்கள் முன்பு வாழ்ந்த மக்கள் பெற்ற பலனை பெறுவீர்கள் என்று அல்லாஹ்வும் கூறியுள்ளான். ஆக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணைந்து

திருக்குர்ஆனின் ஆட்சியை உலகில் நிலைநாட்டி தமக்காகவும் பிறருக்காகவும் ஆன்மீக ஷிஃபாவை பெறுவதற்கான ஏற்பாட்டை செய்து கொள்ளுங்கள்.

நாமும் இதற்கான உரிமையை சரியாக பேணுவதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக. இந்த அருளிலிருந்து ஒருபோதும் நாம் விலகிவிடாதிருக்க வேண்டும்.

சூரா யூனுஸில் அல்லாஹ் கூறுகிறான்.

*மக்களே! நிச்சயமாக உங்கள் இறைவனிடமிருந்து உங்களிடம் அறிவுரை வந்து விட்டது. அது நெஞ்சங்களிலுள்ள (நோய்கள் எல்லா)வற்றிற்கு(ம்) குணம் (அளிக்கக் கூடியது) ஆகவும், நம்பிக்கை கொண்டவர்களுக்கு நேர்வழியாகவும் அருளாகவும் உள்ளது.* (10:58)

இந்த வசனத்தில் அல்லாஹ் முழு மனித குலத்தையும் நோக்கி இது இறைவனின் வேதமாகும் என்று கூறுகிறான். அந்த இறைவன் எல்லா உலகங்களையும் படைத்துப் பரிபாலிப்பவன் ஆவான். அவனுடைய ருபூபிய்யத்திலிருந்து விலகி வானங்களிலும் பூமியிலும் ஏதும் இல்லை. எனவே, இந்த வேதத்தை ஒரு சாதாரண நூல் என்று கருதாதீர்கள். மேலும் இந்த வேதம் இறங்கிய ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களையும் சாதாரணமாக கருதி விடாதீர்கள். அந்த ரஸூலை நாம் (ரஹ்மத்துல் லில் ஆலமீன்) முழு உலகிற்கும் கருணையாக அனுப்பினோம். மேலும் இந்த பண்பின் தேட்டங்களை முழுமைபடுத்தியவாறு இந்த வேதத்தின் மூலம் நீங்கள் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு உங்களுக்கு அறிவுரை வழங்குகின்றான். நீங்கள் ஆன்மீகத்தில் முன்னேற வேண்டும் என்பதற்காக அந்த நூல் உங்களது உள்ளத்தை நோயிலிருந்து தூய்மையாக்குகிறது. அது உங்களுக்கு நேர்வழி மற்றும் கருணையை வழங்குகிறது. இதன் மூலம் நீங்கள் நேர்வழி பெற்று அல்லாஹ்வின் கருணையை ஈர்ப்பவர்களாக மாறுங்கள். இவ்வனைத்தும் நடந்தால் தான் நாம் மூஃமின் என்று அழைக்கப்பட உரிமையுடையவர்கள் ஆவோம்.

எனவே, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இந்த வேத நூலை இறக்கி அல்லாஹ் மனித குலத்தின் மீதும் கருணை காட்டியுள்ளான். இதில் மனிதனை நல்லொழுக்க நிலையிலிருந்து உயர்த்தி இறை நெருக்கம் பெற்ற நல்லடியானாக மாற்றவல்ல அனைத்து கட்டளைகளும் அடங்கியுள்ளது. எனவே மக்களே! இந்த முழுமையான வேத நூலில் இருந்து நீங்கள் பயனடைய முயற்சி செய்யுங்கள். இதன் மூலம் உங்கள் ஆன்மீகமும் பௌதீகமும் சீர் அடையும்.

இவ்வுலகில் உங்கள் பிறவியின் நோக்கத்தை புரிந்து கொள்ளுங்கள். இது திருக்குர்ஆனின் மிகவும் அற்புதமான முறையாகும். ஒரு அறிவுள்ள மனிதன் திருக்குர்ஆனை சிந்தித்துப் பார்த்தால் இஸ்லாம் தனது கொள்கையை வலுக்கட்டாயமாக திணிக்கிறது. அல்லது கடினம் காட்ட கட்டளையிடுகிறது என்று இஸ்லாத்தின் மீது கூறப்படும் குற்றச்சாட்டை மறுக்கிறது என்பது புரிந்து விடும்.

அல்லாஹ் கூறுகிறான். இது உங்கள் இறைவன் புறமிருந்து உங்கள் நன்மைக்காக இறக்கப்பட்ட அறிவுரையாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை கூட்டத்தின் தலைவராக்கி அவரை சக்திவாய்ந்த தலைவராக்குவதற்காக இது இறங்கவில்லை. அல்லது மனிதனை அடிமையாக்கி அவன் மீது தனது ஆதிக்கத்தை செலுத்த வேண்டும் என்பதற்காக இது இறங்கவில்லை. மாறாக, தூய்மையாக முழுமையாக இது உங்கள் நன்மைக்காக இறங்கியதாகும்.

அல்லாஹ் மற்றொரு இடத்தில் தப்லீக் தொடர்பாக இவ்வாறு கூறுகிறான்.

*நீர் நளினமாகவும், அழகிய அறிவுரையைக் கொண்டும் உம் இறைவனின் வழியில் அழைப்பீராக. மேலும் அவர்களுடன் மிக அழகிய முறையில் கருத்துப் பரிமாற்றம் செய்வீராக.* (16:126)

இங்கு **மவ்இதத்தில் ஹஸனா** என்பது (அழகிய அறிவுரை) திருக்குர்ஆனின் அழகிய போதனை ஆகும். இதில் மனிதனின் முன்னேற்றமும் பலனும் தான் இருக்கிறது. இந்த அழகிய போதனை ஆன்மீக ரீதியாக ஷிஃபாவாக விளங்குகிறது.

எனவே நமக்கு தப்லீக் செய்வதற்கு கட்டளை இடப்பட்டுள்ளது என்றால், இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைக்க கட்டளை உள்ளது என்றால் நீங்கள் உங்கள் சக்தியைக் கொண்டு படை திரட்டுங்கள் என்பதற்காக அல்ல. மாறாக, உங்கள் உள்ளத்தில் சக மனித இனத்திற்காக இரக்கம் கொண்டு அந்த இரக்க குணத்தில் முழுமை பெற்று அவர்களை இறைவனுக்க அருகில் கொண்டு வாருங்கள். அவர்களது ஆன்மீக நோயை விலக்குங்கள். உங்களுக்க ஆன்மீக நோயிலிருந்து விடுதலை பெற ஒரே வழி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இறங்கிய இந்த வேத நூல் மட்டும் தான் என்று அவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள். எனவே இறைவனுக்காக அதை ஏற்றுக் கொண்டு உங்கள் இம்மையையும், மறுமையையும் சீர்திருத்துங்கள்.

இஸ்லாத்தின் வரலாற்றை படியுங்கள். இஸ்லாம் தனது அழகிய போதனையின் மூலமே எப்போதும் உள்ளங்களை வென்றது. கடந்த காலத்தில் இஸ்லாத்திற்கு கிடைத்த வெற்றி எல்லாமே இந்த அழகிய போதனையின் மூலம்தான். இன்றும் நாம் அல்லாஹ்வின் அருளால் இவ்வாறே உள்ளத்தை வென்று வருகிறோம்.

உலகிற்கு நான் கூறுகிறேன். சில தீவிரவாதிகளின் தகாத செயலின் காரணமாக மேற்கத்திய நாடுகள் இஸ்லாத்தின் மீது தவறாக பழிசுமத்துகிறார்கள். சற்றும் சிந்திக்காமல் இவ்வாறு பழிசுமத்துவதற்குப் பதிலாக இதன் அழகிய போதனையைப் பார்க்க வேண்டும். எனவே இந்த அழகிய போதனையை முன்பை விட அதிகமாக மக்களுக்கு போதிப்பது நமது பொறுப்பாகும். இதன் மூலம் நாம் மனித குலத்திற்கு ஷிஃபா வழங்குபவர்கள் ஆவோம். நாம் பலன்பெற்றுக் கொண்டிருக்கின்ற நேர்வழி மற்றும் கருணையில் பிறரையும் இணைப்பவர்களாக இருக்க வேண்டும். இதுவே ஒரு அஹ்மதிக்கு உலக மக்களிடம் இருக்க வேண்டிய உண்மையான இரக்கமாகும்.

இங்கு இன்னொரு விஷயத்தையும் விளக்குவது அவசியமானதாகும். இதில் அல்லாஹ் கூறுகிறான்.

ஷிஃபாவுன் லிமா ஃபிஸ்ஸுதூர் – அதாவது அவர்களின் உள்ளங்களில் காணப்படும் நோய்க்கு இதில் ஷிஃபா இருக்கிறது. எண்ணங்கள் மூளையில் தான் உதிக்கின்றன. நல்ல எண்ணமானாலும் தீய எண்ணமானாலும் அதற்கு உள்ளத்தோடு என்ன தொடர்பு இருக்கிறது? என்று இதன் மீது இப்போது கூட ஆட்சேபனை செய்யப்படுகிறது. ஆனால் சில உளவியல் ஆராய்ச்சியாளர்கள் உள்ளத்திற்கு ஆன்மீகத்தோடு நெருங்கிய தொடர்பு உண்டு என்று கூறுகிறார்கள்.

திருக்குர்ஆன் இந்த கருத்தை கூறிவிட்டது. எனவே இவ்விஷயத்திற்கு இதுவே மாபெரும் சான்றாகும். ஆனால் நான் உங்களுக்கு கூற விரும்புவது மனதிற்கும் மூளைக்கும் என்ன தொடர்பு இருக்கிறது? என்பதன் மீதும் இப்போது ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது. உணர்ச்சிகள் மற்றும் எண்ணத்தின் தாக்கம் மனதில் உருவாகிறதா இல்லையா என்பது பற்றி ஆராய்ச்சி நடக்கிறது. விஞ்ஞானிகள் எண்ணங்களின் தாக்கம் மனதில் தான் முதலில் ஏற்படுகிறது என கூறுகிறார்கள். இன்னொரு ஆராய்ச்சி மூளை மனதிற்கு அனுப்பும் தகவல்களை விட மனது மூளைக்க அனுப்பும் தகவல்கள் தான் அதிகம் என்று கூறுகிறது. இந்த ஆராய்ச்சிகள் எல்லாம் உடல்ரீதியான நோய்களுக்கு பௌதீக ரீதியிலான ஆராய்ச்சிகள் ஆகும். ஆன்மீக ரீதியான ஆராய்ச்சியை நேரடியாக பௌதீகவாதிகள் செய்ய முடியாது. ஆனால், இவர்களின் ஆராய்ச்சியில் சில உணர்ச்சிகள் மனிதனை தீமையின் பக்கம் இட்டுச் செல்கிறது என கூறுகிறது. இதே அளவுகோளில் பார்த்தால் உள்ளத்தின் ஆன்மீக நோய்தான் மனிதனை நேர்வழியிலிருந்து விலக்குகிறது என புரியும். சிலர் இதில் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் இதை மறுக்கிறார்கள். ஆனால் உலகின் கவனம் இதன் பக்கம் திரும்புகிறது என்பது புரிகிறது. சிலர் கூறுகிறார்கள். மனதில் எண்ணம் தோன்றுகிறது. பிறகு அது மூளைக்கு தகவல் கொடுக்கிறது என கூறுகிறார்கள். ஆனால் சிலர் இதை மறுத்து முதலில் மூளைதான் மனித உறுப்புகளுக்கு கட்டளை இடுகிறது. உள்ளத்திற்கும் இதற்கும் எந்த தொடர்பும் இல்லை என்ற கூறுகிறார்கள். எவ்வாறு இருந்தபோதிலும் உலகிற்கு இதன் பக்கம் கவனம் வந்துள்ளது.

ரப்வாவில் Tahir Heart Institute -ன் Incharge டாக்டர் நூரி சாஹிப் அரசு ஊழியராக இருந்த போது தமது Clinic -ல் **அலா பிஸிக்ரில்லாஹி தத்மஇன்னுல் குலூப்** - கவனமாகக் கேளுங்கள். அல்லாஹ்வின் நினைவிலேயே உள்ளங்கள் அமைதி அடைகின்றன என்று எழுதி வைத்திருந்தார்கள்.

அஹ்மதி மருத்துவர்தான் இவ்வாறு சிந்திக்க முடியும். நிச்சயமாக அல்லாஹ்வை நினைவு கூர்வது உள்ளத்திற்கு அமைதியைக் கொடுக்கிறது. பலவித நோய்கள் சில உணர்ச்சியினால் உருவாகின்றன. எனவே ஆன்மீக மற்றும் பௌதீக **ஷி**ஃபா அல்லாஹ்வை நினைவு கூர்வதில் இருக்கிறது. இதற்கான வழிமுறையை திருக்குர்ஆனில் மிக அழகிய முறையில் தெளிவாக விளக்கியுள்ளான்.

சிலர் இதில் கருத்து வேறுபாடு கொண்டாலும் விஞ்ஞானிகள் இதை ஆராய்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

இதோடு தொடர்புடைய ஒரு வி**ஷ**யத்தை கூற விரும்புகிறேன். Tahir Heart Institute -ஐ அல்லாஹ்வின் அருளால் டாக்டர் நூரி சாஹிப் மற்றும் அவர்களது Staff மிகவும் கடின உழைப்போடு இதை நடத்தி வருகிறார்கள். நோயாளிகள் குணமடைகின்ற அற்புதங்கள் இங்க நிகழ்கிறது. அதை எண்ணும் போது ஆச்சரியம் ஏற்படுகிறது. அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து அங்கு சென்ற மருத்துவர்களும் என்னிடம் இதை கூறினார்கள். சில case -கள் குணமடைவதைக் கண்டு நாங்களே ஆச்சரியம் அடைகிறோம். இது அல்லாஹ்வின் அருளாகும். நமது மருத்துவர்கள் துஆ செய்து விட்டு பணியைச் செய்கிறார்கள். அவர்களுக்கு அல்லாஹ்வின் மீது நம்பிக்கை இருக்கிறது. அல்லாஹ் இவர்களது கைகளில் **ஷி**ஃபா வைப்பானாக. முன்பை விட அதிகமாக இங்கு வருகிற நோயாளிகள் குணமடையட்டுமாக.

அல்லாஹ் இன்னொரு வசனத்தில் இவ்வாறு கூறுகிறான்.

*நாம் இதனை வேற்றுமொழியிலுள்ள குர்ஆனாக ஆக்கியிருந்தால், நிச்சயமாக அவர்கள், இதன் வசனங்கள் ஏன் தெளிவாக விளக்கப்படவில்லை என்றும் என்ன! (வேதம்) வேற்றுமொழியும் தூதர் அரபியுமா என்றும் கூறியிருப்பார்கள். நீர் கூறுவீராக. நம்பிக்கை கொள்பவருக்கு அது வழிகாட்டியும் குணப்படுத்துகின்றதுமாகும். ஆனால் நம்பிக்கை கொள்ளாதவர்களின் காதுகளில் செவிட்டுத் தன்மை உள்ளது. அது அவர்களுக்கு மறைந்ததுமாகும். அவர்கள் வெகுதொலைவிலிருந்து அழைக்கப்படுகின்றவ(ர்கள் போன்றோ)ராவர்.* (41:45)

இதற்கு முந்தைய வசனங்களில் அல்லாஹ் கூறுகிறான்.

சிலர் அல்லாஹ்வின் வசனத்தில் பிறரை வழிகெடுக்கும் நோக்கத்தோடு குறை தேடுகிறார்கள். மக்களை இந்த போதனைகளிலிருந்து விலக்குவதற்காக தேடுகிறார்கள். அல்லாஹ் கூறுகிறான். இவர்களோடு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நாமே பார்த்துக் கொள்வோம். இவ்வுலகில் நீங்கள் நாடுவதை செய்யுங்கள். ஆனால், ஒன்றை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த குர்ஆன் மிகவும் கண்ணியமான வேதமாகும். இதை ஏளனம் செய்து நீங்கள் உங்களையே அழித்துக் கொள்கிறீர்கள். உங்களது ஏளனம் இந்த வேத நூலிற்கு எந்த இழப்பையும் ஏற்படுத்தி விட முடியாது. ஏனென்றால், இது உண்மையான போதனையை உள்ளடக்கியதும், பொய் இதன் அருகில்வட நெருங்க முடியாது. மேலும் பொய் இதற்கு எந்த இழப்பையும் ஏற்படுத்தி விட முடியாது. நல்ல உள்ளம் படைத்தவர் நிச்சயமாக இதிலிருந்து பலன் பெறுவார். தீய உள்ளம் படைத்தவர்கள் இதன் மீது ஆட்சேபனை செய்து கொண்டுதான் இருப்பார்கள்.

இங்கு சொல்லப்படுகின்ற ஆட்சேபனையைப் பற்றி அல்லாஹ் கூறுகிறான். நாம் குர்ஆனை வேற்றுமொழியில் இறக்கியிருந்தால் இவர்கள் இதை அரபியில் ஏன் இறக்கவில்லை? அவ்வாறு இறக்கி இருந்தால் வசனங்கள் எங்களுக்கு விளங்கி இருக்குமே என்று கூறுவர். அல்லாஹ் கூறுகின்றான். இந்த குர்ஆன் நம்பிக்கை கொள்கின்ற மக்களுக்கு தான் நேர்வழிகாட்டும். ஆட்சேபனை செய்பவர்கள் செவிடர்கள் ஆவர். இதன் காரணமாக இதன் அழகிய போதனையை இவர்களால் கேட்க முடியாது. இதன் மூலம்

இவர்களுக்கு எந்த பலனும் கிடைக்காது. ஒன்று இவர்கள் செவிடர்கள் ஆவர். இன்னும் இவர்கள் தொலைவில் நின்று கொண்டதால் செவிட்டுத் தன்மையில் இவர்கள் இன்னும் முன்னேறிவிட்டனர். மேலும் இதன் அருகில் இவர்கள் வர விரும்புவதும் இல்லை. இவர்கள் தொலைவில் நின்று கொண்டு ஆட்சேபனைகளை மட்டும் செய்து கொண்டிருக்கின்றனர். இதன் பக்கம் சிந்திக்க விரும்புவதில்லை.

இந்த நிலைதான் இன்றைய காலத்தில் திருக்குர்ஆன் மீது ஆட்சேபனை செய்கின்ற மேற்கத்திய நாடுகளின் நிலையாகும். இவர்கள் புரியாமலேயே இதன் மீது ஆட்சேபனைகள் செய்து கொண்டே செல்கின்றனர். புரிய முயற்சி செய்வதில்லை. பலர் இவ்வாறு இருக்கின்றனர்.

இந்தியாவில் சுற்றுப் பயணத்தின் போது ஒரு கிறிஸ்தவர் என்னை சந்தித்தார். அவர் திருக்குர்ஆனிலிருந்து கற்றுக் கொண்ட பல விஷயங்களை என்னிடம் கூறினார். ஆக, கற்றுக் கொள்ள விரும்புபவருக்கு அல்லாஹ் மெல்ல மெல்ல நேர்வழியையும் வழங்கி விடுகிறான்.

அல்லாஹ் உலகின் பெரும்பாலாருக்கு நல்லறிவை வழங்குவானாக. இந்த அழகிய போதனையைப் புரிந்து கொள்ளம் தவ்ஃபீகை வழங்குவானாக. மேலும் தமது இம்மையையும் மறுமையையும் சீர்திருத்துவதற்கான வாய்ப்பை வழங்குவானாக. நாம் முஸ்லிம்களுக்காகவும் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் அவர்களுக்கும் நல்லறிவை வழங்குவானாக. அவர்களது உள்ளங்களையும் திறப்பானாக. அவர்களும் திருக்குர்ஆனின் உண்மையான போதனைகளைப் புரிந்தவாறு காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டு தங்களது ஆன்மீக நோய்களுக்கு ஷிஃபா பெறுவார்களாக.

முஸ்லிம்களின் இன்றைய நிலை ஒவ்வொரு உண்மையான முஸ்லிமையும் அழ வைக்கிறது. உலகிற்கு ஷிஃபா வழங்கும் வாதம் செய்கிறவர்கள் இன்று ஆன்மீக, பௌதீக, உடல்ரீதியாக, மனரீதியாக ஒவ்வொரு ரீதியிலும் நோயாளியாக உள்ளனர். தேவையுடையவர்களாக உள்ளனர். ஆன்மீக மற்றும் பௌதீக ஷிஃபாவைப் பெறுவதற்கு காலத்தின் இமாமை ஏற்றுக் கொள்கின்ற நற்பாக்கியம் பெறுவதற்கு துஆ செய்யுங்கள். அல்லாஹ் இவர்களுக்கு நல்லறிவை வழங்குவானாக. காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டு உலகில் அவர்கள் தொலைத்த சக்தியை மீண்டும் பெறச் செய்வானாக. நாமும் இந்த ஆன்மீக நீரூற்றிலிருந்து எப்போதும் பலன்பெறுகின்ற தவ்ஃபீகை அல்லாஹ் நமக்கும் வழங்குவானாக. மேலும் எல்லாவித ஆன்மீக மற்றும் பௌதீக நோயிலிருந்து அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 26.12.2008**

Translated by : **Maulavi S. ABDUL QADIR Sb.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**